# குருதேவர்

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை - 23

பண்பாட்டுக் கழக வெளியீடு
[உறுப்பினர்களுக்கு மட்டும்]

## சனீசுவரத் தோத்தரச் சிறப்பு மலர்

[பதினெண் சித்தர்கள் வழங்குவது]



ஒன்பது கோள்களின் நாயகனும் அருள்மிகு சனீசுவரர்

வெளியீடு;- 26—11—85 காணிக்கை:- ரூ 1-00

# சனீசுவரத் தோத்தரம்

1 ஏ! ஏ! ஏ! ஏமசோதிச் சனீசுவரா தோத்தரம் ஏற்றிடுக
2 வா! வா! வா! வாமசோதிச் சனீசுவரா தோத்தரம் ஏற்றிடுக
3 கா! கா! கா! காம சோதிச் சனீசுவரா தோத்தரம் ஏற்றிடுக
4 சோ! சோ! சோ! சோம சோதிச் சனீசுவரா தோத்தரம் ஏற்றிடுக
5 நீலக்கல்லாய் நிலேத்த அருள்வழங்கு சனீசுவரா தோத்தரம் ஏற்றிடுக
6 எள்ளும் எண்ணெயும் எரித்ததுமே எழுந்தருளும் சனீசுவரா தோத்தரம் ஏற்றிடுக
7 மைக்கறுப் பழகால் வையம் காக்கும் சனீசுவரா தோத்தரம் ஏற்றிடுக
8 மூன்றும் பிறையமர்ந்து முத்திதரு சனீசுவரர் தோத்தரம் ஏற்றிடுக
9 முனிவர் இருடி அக்கினி காக்கும் சனீசுவரா தோத்தரம் ஏற்றிடுக
10 அருவுருவ இயவுளாகித் தீமைகள் தீர்க்கும் சனீசுவரா தோத்தரம் ஏற்றிடுக
11 பிண்டம் அண்டம் பேரண்டம் அண்டபேரண்டம் காத்திடுக
12 தேடிடும் செல்வம் பலவும் தேடிவர அருளுக!
13 எமவாதை அச்சமகற்றி நீடித்த ஆயுள் அருளுக!
14 ஒன்பது கோள் நற்றுணையும் உதவியாகிட அருளுக!
15 பன்னிரண்டு இராசிகள் பக்கத் துணையாகிட அருளுக!
16 இருபத்தேழு விண்மீன்கள் தோதாகக் காத்திட அருளுக
17 அருளுறு பூசைகள் சித்திக்கச் சத்தியருளுக
18 இருளகற்றுக இன்னல் தவிர்த்திடுக நாமேயாகுக
19 நாதியாதி ஆதிநாதி நாயகனே நலமே நல்குக!
20 அச்ச மாச்சரிய ஆச்சரிய வேதனைகளைத் துச்சமாக்கிடுக!
21 ஒன்பது கோள் நாயகனே உமக்கு வழங்குகிறோம் தோத்தரம்
22 பயிரின உயிரினங்கள் தழைக்கக் காப்புப் பல பயந்திடுக
23 சனீசுவரா நீயே சுவையாகுக! சுவையாகுக! சுவையாகுக!
24 சனீசுவரா நீயே சச்சிதானந்த அருட் பெருஞ்சோதி யாகுக
25 சனீசுவராய நமச்சிவாய பராசக்தி நாராயண நாமாகுக
26 சனீசுவராய நாள் கோள் மீன் இராசி சித்தி முத்தி நாமாகுக
27 சனீசுவராய அருட்பயிரே விளைந்திடுக! விளைந்திடுக! விளைந்திடுக!
28 ஓம் சனீசுவரா அனைத்தும் பிழைத்திட நல்லாட்சி நிகழ்த்துக
29 ஓம் சனீசுவரா அத்தனையையும் காத்திட வல்லாட்சி நிகழ்த்துக
30 ஓம் சனீசுவர எத்துணையையும் பேணிட அருளாட்சி நிகழ்த்துக
31 ஓம் சனீசுவரா தழைத்தெழு நீ! தழைத்தெழு நீ! தழைத்தெழு நீ! தழைத்தெழு நீ!
32 ஓம் சனீசுவரா தோத்தரமேற்றிடு தோத்திரமேற்றிடு தோத்திரமேற்றிடு

—குருபாரம்பரியம் வழங்கும்
**சனீசுவரத் தோத்தரம்**

அங்கவியல் சாத்திர அடிப்படைகள் முப்பத்திரண்டாவது போல்; விண்வெளி யுலகின் ஆட்சிக்கு இலக்கியமும் இலக்கணமுமாக, உயிரும் உயிர் மெய்யுமாக, சொல்லும் பொருளுமாக சத்தியும் சிவமுமாக, இரவும் பகலுமாக உள்ள சனீசுவரன் 'முப்பத்திரண்டு தோத்தர வரி-களால்' பூசை செய்யப்படுவதே பதினெண் சித்தர்கள் கண்ட பூசைவழி, பூசாமொழி, பூசா விதி, பூசை முறை, பூசைநெறி பூசை வேதம்............

# சனீசுவரக் காயந்திரி மந்தரம்

## (ஒன்பது கோள்களின் நாயகன் வழிபாடு)

இன்று பலருக்குப் பிறப்பியல் [சாதகம்Horoscope] எழுதப்படாத குறையிருக்கின்றது. சிலருக்குத் தங்களின் சாதகம்[ஜாதகம் வடமொழிச்சொல்] சரியானதாக இருக்காது என்ற சந்தேகம் இருக்கின்றது இந்த நிலைகளால் தங்களுக்கு எந்தக் கோள்[கிரகம்] பாதித்திருககிறது என்று தெரியாமல் தடுமாறுகிறார்கள் கவலைப்படுகிறார்கள், இவர்களுக்குப் பயன்படும வண்ணமே பதினெண் சித்தர்களின் பூசாவிதி நூலில் 'ஒன்பது கோள்களின் நாயகன் வழிபாடு' என்ற பூசா விதி [மறை, முறை, நெறி, வேதம்........] வழங்கப்பட்டிருக்கிறது.

இந்து மதத்தில் ''மனிதன் கடவுளாகலாம்'. எதுவும், எவரும்....முயன்றால் ஈசுவர[ப்பட்டம்] நிலையினை எய்தலாம் [ஈசன் = தலைவன் = கடவுள்] பயிற்சியும் முயற்சியும் எத்தகைய சக்தியையும், சித்தியையும், முத்தியையும் வழங்கும்....என்ற அரிய, பெரிய, சமத்துவப் பொதுவுடமை சித்தாந்தக் கருத்துக்கள் இருக்கின்றன,

மனிதன் தனக்குக் கோள்களின் பாதிப்புகள் இருப்பதை நீக்கிப் போக்கிக் கொள்ளவும்; கோள்களின் [பெயர்ச்சியால்] பாதிப்புகள் வராமல் தடுத்துக் கொள்ளவும் **பரிகாரப் பூசைகள்** பதினெண் சித்தர்களின் பூசாவிதிகளில் பல உள்ளன. இதேபோல் நாள், மீன் இராசிப் பாதிப்புக்களுக்கும் பரிகாரப் பூசைகள் உள்ளன. அதாவது, பதினெண் சித்தர்களின் இந்துமதம்; ''...விண்வெளியில் உள்ள நாள்களும், கோள்களும், மீன்களும், இராசிகளும் தான் மண்ணுலகின் பயிரினங்கள், உயிரினங்கள், பருவகாலங்கள்...... முதலிய அனைத்தையும் நேரடியாகக் கண்காணித்து இயக்கி வளர்க்கின்றன. எனவே, உரிய தமிழ்மொழி எழுத்துக்களாலும், சொற்களாலும் ஒலியெழுப்பிப் படையல்களுடன் பூசை செய்தால் விண்வெளிக் கண்காணிப்புச் சக்திகளைத் தங்களுக்குச் சாதகமாக்[சாதகம் = மனிதனுக்கு நலமளிக்க; வாழ்வியலோடு இணைந்த பேருண்மைகளை விளக்கவும அரிய சக்திகளை வழங்கிடவும் உதவக் கூடிய குறிப்புக்கள்—> பெரிய அருளாளர்களின சாதனைகளை அகத்திலே கொண்டதுதான் சாதகம — குருபாரம்பரிய விளக்கம் பிறப்பியல் = சாதகம் பதினெண் சித்தர்களின் வானியல் அறிவே இந்தச் சாதகம் எனும் ஞானக்கலை] மாற்றியமைத்துக் கொள்ளலாம், இதற்கு உதவுவதே **சனீசுவரப் பூசை**. அதாவது ஈசுவரனுக்குச் சமமாக அருளாற்றல் பெற்றவர்களாகச் சனீசுவரர், முனீசுவரர் ... என்ற சிலரே உள்ளனர். இச் சிலரால் **சனீசுவரர் விண்வெளியியல் ஆட்சியிலும், முனீசுவரர் மண்ணுலகியல் ஆட்சியிலும்** எத்தகைய மாற்றங்களையும், திருப்பங்களையும் தங்களது விருப்பம் போல் உருவாக்கும் ஆற்றலுடையவர்கள். எனவேதான் '**மண்ணுலகக் கடவுள்கள்**' [The Gods of the Earthly pleasures], 'விண்ணுலகக் கடவுள்கள் [The Gods of the Heavenly pleasures] என்று இருபெரும் பிரிவுகள் பதினெண் சித்தர்களின் இந்துமதத்தில் மிகத் தெளிவாகக் குறிக்கப் படுகின்றன.

இந்து மதப் பூசாவிதிகளில் ஈசுவரப் பூசை என்பதற்குப் பல பூசா விதிகள் உள்ளன. இவற்றில் சனீசுவரப் பூசை, முனீசுவரப் பூசை, அருதீசுவரர், ஆதீசுவரர், பாதீசுவரர், மீதீசுவரர், வானீசுவரர், பாதனீசுவரர், பரமேசுவரர், மகேசுவரர்...... என்று **பதினெட்டு(18)** ஈசுவரர்களின் பூசா விதிகள் மிகச் சிறப்பாகச் செயலில் உள்ளன, இவற்றில் சனீசுவரரின் பூசாவிதி மிகத் தெளிவாக அனைத்து விதமான நாள், கோள், மீன், இராசிப் பாதிப்புகளுக்கும் பரிகாரமாகச் சொல்லப் படுகின்றது. இதனை, ஈசுவரர்களும் செய்வதாகக் குறிப்புள்ளது.

—குருபாரம்பரியம்

சனீசுவரப் பூசை குருவழியாக, குருவின் வாழ்த்தோடும் துணையோடும் நிகழுதல் விரைந்து பயனளிக்கும் என்று குறிக்கப்படுகின்றது.

சனியின் பாதிப்புள்ளவர்கள் அன்றுடம் மாலையில் எள் விளக்கேற்றி அல்லது மாமிசக் கொழுப்பெண்ணெயில் விளக்கேற்றி சனீசுவரக் காயந்திரி மந்தரம் (48)நாற்பத்தெட்டு முறை கூறிச் சனீசுவரனை வேண்டிக் கொள்ள வேண்டும். அப்பொழுதும் சாதாரணமாகச் சனியின் அருளை வேண்டுபவர்களும், மற்ற நாள், கோள், மீன், இராசிப் பாதிப்புகளிலிருந்து தப்பிக் கொள்ள விரும்புகிறவர்களும் கூறவேண்டிய சனீசுவரக் காயந்திரிமந்தரம், மந்திரம், மந்திறம்' மாந்தரம், மாந்தரீகம்......தேவைக்கேற்பக் குருவழி தெரிந்து கொள்ளவேண்டும். அல்லது குருவானவர் உரியவருக்கு உரியகாலங்களில் கற்பிக்கவேண்டும்.

—குருபராம்பரியச் சட்டம்

## சனீசுவரக் காயந்திரி மந்தரம்

**ஒன்பது கோள் நாயகனே! சனீசுவரா! தழைத்தெழு நீ! வாழியவே!**
**சனீசுவரா! பகவானே! அரையா வித்தைகளின் மகவே;**
**பங்கு வழங்கு ஆதாயம் தீயில் மகிழ்வே!**
**உன்னோடு மந்தநிலே, அந்திநிலைப் பிறச்சினைகள் அற்றிடட்டும்!**
**காக்கையேறு கருநாக ஈசுவரனோ கவலையகற்றிக் காத்திடுக"**

இந்த ஐந்து வரிகளே குருவாக்கு, குருவாசகம், குருவாக்கியம், குருபராம்பரியம் எனும் நான்கிலும் சிறப்பாகப் பேசப் படுகின்றன. இந்த மந்தரத்தால் அருளுலகில் நல்ல செல்வாக்குப் பெறலாம். பொருளுலகத் தொல்லைகளையெல்லாம் போக்கிக் கொள்ளலாம். உலக மானுடர்கள் இந்த ஒலிநயம் கெடாமல் தங்கள், தங்களின் மொழிகளில் ஓதலாம் இதே பொருள் படத் தங்களது மனந்திறந்த உரைகளை, வாசகங்களைக் கூறி அவரவர் மொழியில் பூசை செய்யலாம். தங்கள் தங்களின் தீமைகளைத் தாங்களே அகற்றி நன்மைகளை விளைவித்துக் கொள்ளலாம்

இப்படி ஒவ்வொருவரும் தாங்களே முயன்று தங்களுடைய ஆருயிர், ஆவி, ஆன்மாஎனும் மூன்றையும் தூய்மைப்படுத்தி, வாய்மைப்படுத்தி உய்வு பெறச் செய்து கொள்ள வழிகாட்டுவதுதான் பதினெண் சித்தர்களின் மெய்யான இந்து மதம். எனவே இடைத்தரகர்களை நியமித்து பூசைகளைச் செய்யும் ஹிந்து மதம் பிற மண்ணினரான பிருமணர் எனப்படும் வடஆரியரின் வேதமதமேயாகுமென்பதை உணரவேண்டும் அதாவது பதினெண் சித்தர்களின் சித்தர் நெறியே மெய்யான இந்து மதம்; பிறமணருடைய ஹிந்து மதம் பொய்யான இந்து மதமாகும்

# சித்தர் இராமாயணம் - 2

(அதுமட்டுமல்ல; அவர்கள் சீதை காணமல்போன செய்தியை அயோத்திக்கும், காடுகளில் வாழ்ந்த முனிவர்களுக்கும், இருடிகளுக்கும், பாண்டிய, சோழ, சேர மன்னர்களுக்கும் தெரிவித்து அவர்களின் துணையோடு சீதையைத் தேட முயற்சிக்கவில்லை. குரங்கான, அனுமனை அனுப்பித் திருட்டுத்தனமாக அசோகவனத்திலிருந்த சீதையோடு தொடர்பு கொண்டதுமல்லாமல், அந்தக் குரங்கு இலங்கையின் பல பகுதிகளை அழித்தும், இராவண குமாரனைக் கொன்றும் செய்த அடாத செயல்களுக்கு இராமனும் இலக்குவனும் இராவணனுக்குத் தூதனுப்பி மன்னிப்பு கேட்கவில்லை சீதை இருக்குமிடம் தெரிந்தபிறகும்கூட அயோத்தியின் இளவரசர்கள் முறைப்படி அரசர்களுக்கு ஓலையனுப்பி நால்வகைப் படையுடன் வந்து இராவணனைச் சந்திக்கவில்லை. அரசமுறைப்படி மனிதர்களைத் தூதாக அனுப்பவில்லை, இலங்கையின் எல்லைக்குக் குரங்குப்படையுடன் சென்ற பிற-கும் கூட தனது தம்பியான இலக்குவனை இராவணனிடம் தூதுஅனுப்பவில்லை மனிதனை தூதாக அனுப்பாமல் அங்கதன் என்கின்ற ஒரு குரங்கையே தூதாக அனுப்பி இராவணனை மீண்டும் அவமானப்படுத்தினான்)(சூர்ப்பனகையின் மூக்கையறுத்த இலக்குவன் இலங்கேசுவரனை இராவணனை நேரில்பார்க்க அஞ்சிநடுங்கினான். இராமனும்தாங்கள் சூர்ப்பனகையை அவமானப்படுத்தியதற்குச் சமாதானம் கூறி அல்லது மன்னிப்பு கேட்டு இராவண-னுக்குத் தூதுஅனுப்பவேயில்லை இராமன் விரும்பியதெல்லாம் இராவணனின் பெ-ரிய சேனையை தான் கொண்டு வந்திருக்கும் குரங்குக்கூட்டம் முறையற்ற முறையில் போரிட்டு அழிக்க வேண்டுமென்பது தான், ஏனென்றால் காட்டிலிருந்த முனிவர்-களும், இருடிகளும் இராவணனும், இராவணனின் சேனையும் அரக்கர் படையும் குரங்குகளால் அழியும் என்ற சாபம் ஏற்கனவே இருக்கிறதென்பதைப்பற்றி இராம-னிடம் கூறியிருந்தார்கள். எனவே தான் இராமன் சூரிய குலத்தின் மிகப்பெரிய வீரனாக தான் வளர வேண்டும் என்ற ஆசையில் தனது திரேதகாயுகத்தில் மூவுல-கையும் வென்று வாழும் இராவணேசுவரனை எப்படியாவது வென்று பெரும் புகழ் ஈட்டி விட வேண்டும் என்று [பேராசைப்பட்டு போருக்குத் தயாரானான்). (கற்புக்-கரசியான வண்டமர்குழலி இராமனின் பேராசையை ஊகித்துணர்ந்து இராவண-னிடம் '...16 வயது பாலகனாக இருக்கும் போதே 32 வயது குமரியான சீதையிடம் காமக்களியாட்டத்தில் அளவுக்கு மீறி ஈடுபட்டு பேடியாகி விட்ட இராமன், மூவுல-காளும் இலங்கேசுவரனை வென்று வாழப் பேராசைப்படுகிறான். எனவே தாங்கள் அந்த இராமனை மதித்துப் போர்க்கோலம் பூண்டு போர்க்களம் செல்லத் தேவை-யில்லை நமது செல்வன் இந்திரசித்தே (மேகநாதன்) போதும், அந்தக்குரங்கு பட்-டாளத்தையும், நெறிமுறைதவறிய அயோத்தி இளவரசர்களையும் வென்றிடுவதற்கு' என்று கூறினாள்).

அதாவது இராமன், இராவணனோடு போர் செய்யக்கூடிய ஒரு வாய்ப்பு தனக்குக் கிடைத்தது என்று கூட மிக மகிழ்ந்திடக்கூடாது" என்று எச்சரிக்கை-யோடு செயல்பட்டாள் வண்டமர்குழலி. ஆனால் சூழ்ச்சியிலும், நெறிமுறையற்ற செயல்களிலும், போர்ச்சதிகளிலும் வல்லமை பெற்ற பேடியான இராமன் மிகத் தந்திரமாக இராவணன் தம்பிவிடணைத் தனக்குத் துணையாக்கிக் கொண்டு இராவ-ணேசுவரனின் வலிமைகளனைத்தையும், ஆற்றல்களனைத்தையும், திறமைகளனைத்தை-யும், பண்புகளனைத்தையும் நீதி தவறாது நேர்மையான முறையிலேயே போரிடக் கூடிய பழக்கத்தையும்...தெரிந்து கொண்டு அனைத்து விதமான சதிகளையும், சூழ்ச்-சிகளையும், முறைகேடுகளையும், அநீதிகளையும், தவறுகளையும், பிழைகளையும்... படிப்படியாக அடிப்படையோடு செய்து கும்பகர்ணனையும் மேகநாதனையும்கொன்று இறுதியில்இராவணேசுவனையும் கொன்றான. இதுஒரு வகையில் திரேதகாயுகத்தின் மன்னர் மன்னனாய் பெருவேந்தனாய் அரக்கர்கோனாய் விளங்கிய இராவணேசுவர-னுக்கு பெருமபுகழையே தேடிக் கொடுத்தது. ஆனால் சூரியர் குலத்துக்கு கேவலம்

வந்துவிடக்டகூாது என்பதற்காகத் தான் 18 வால்மீகிகளும், பல கம்பர்களும் இராவணனின் பெருமைகளை மாசுபடுத்தி, இராமனின் தவறுகளைமறைத்து இராம கதை இராமகாதை, இராமகாவியம், இராமகவிதை, இராமகீதை, முதலியவைகளை இயற்றினார்கள்.

இருந்தபோதிலும் இராமன் இராவணனைக் கொன்ற பிறகு மிகுந்த மனக்கலக்கத்திலும் சிந்தைக்குழப்பத்திலுமே இருந்திட்டான். அதனால்தான் சீதையோடு வாழ்ந்த வாழ்வையெல்லாம் மறந்து அவளைக் காட்டுக்கு அனுப்பவும் துணிந்திட்டான். அதன்பிறகும் தன்னுடைய மக்களான இலவகுசர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாதவனாகவே இருந்திட்டான். அரசனுக்குரிய இலக்கணப்படி ஒற்றர்கள்மூலம் காட்டில்விடப்பட்ட சீதையைப்பற்றிய செய்திகளைசேகரிக்காமல் இருந்துவிட்டான். இராவணனைக் கொன்றுப் பெரும்புகழ் ஈட்டியிருந்த தனது அசுவமேதயாகக் குதிரையை இரண்டு சிறுவர்கள் பிடித்து நிறுத்தினார்கள் என்று கேள்விப்பட்ட உடனேயே ஒற்றர்களையோ தூதுவர்களையோ, மந்திரிகளையோ தனது தொண்டனான அநுமனையோ அனுப்பி அந்தச் சிறுவர்கள் யார்? என்று அரசநீதியில் அறிய முற்படவில்லை. இதேபோல் முரட்டுப் பிடிவாதமாகத் தனது மகன்களாகிய இலவ குசர்களிடம் எதிர்த்துப் போரிட்டுத் தோற்றுப் பேடியாக சரயு ஆற்றில் மூழ்கி இறந்தான்.

சூரியகுலத்தில் இப்படியொரு மன்னன் தோன்றினான் என்ற வரலாற்றை மூடி மறைக்காவிட்டால் சிக்கர்களசபுசுண்டரின் பேருக்கே இழிவுவரும்என்பதால்தான் இராமனின் வரலாற்றை சூரியகுலத்துக்குப் பெருமைதரும் வண்ணம் கதையாகவும், காதையாகவும், கவிதையாகவும் கீதையாகவும் இருபத்தேழு வண்ணங்களில் எழுதுமாறு பதினெட்டு வால்மீகிகளுக்கும் பல கம்பர்களுக்கும் ஆணைபிறப்பித்தோம் யாம்(யக்ஞவல்லி). இருந்தபோதிலும் உண்மையை மறைக்க பழியும் குற்றமும் எமக்குவந்துச் சேர்ந்துவிடக் கூடாது என்பதாலேயே யாம் எமது யுகத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையெல்லாம் உள்ளது உள்ளபடியே குறித்து வைக்கும் வழக்கப்படி இராமன் இலக்குவன், சீதை, இராவணன், வண்டமர்குழலி, கும்பகர்ணன், மேகநாதன்(இந்திரசித்) வீடணன், விசுவாமித்திரர், வசிட்டர், சனகர், எண்கோணமேனியான்...... முதலியவர்கள்பற்றி உண்மை நிகழ்ச்சிகளையும் எமது உணர்வோட்டங்களையும் அவ்வப்போதுக் குறித்து வைத்துள்ளோம். இக்குறிப்புகள் சித்தர்களுக்கு மட்டுமாவது தெரிந்திருக்க வேண்டுமென்பதாலேயே இக்குறிப்புக்களுக்குச் சித்தர் இராமாயணம் என்று பெயரிட்டோம்.]

—யக்ஞவல்லி

# இந்துமதம்-ஹிந்துமத விளக்கக் கட்டுரைத் தொடர்-5

'பிறங்கியாதி பதினாறு பேர்' என்றோர் சொற்றொடர் குரு பாரம்பரியத்தில் குருவாசகத்தில் குருவாக்கியத்தில் காணப்படுகின்றது. ஆனால் இந்தப் பதினாறு பேர் யார் என்று கண்டுபிடிக்கக் கூடிய அளவிற்குப் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதியாகியாகிய எமக்கு தெரிந்து கொள்ளக் கூடிய போதுமான வசதி வாய்ப்பு ஏற்படவில்லை என்பதை வருத்தத்தோடு கூறிக்கொள்கிறோம். இது பற்றித் தெரிந்தவர்கள் உடனடியாக, செய்தி அனுப்புமாறு வேண்டிக் கொள்கிறோம் அதுவே உண்மையான இந்து மதத்தை செழிச்சி பெறச் செய்ய உதவும்.

ஆரியர்களால் உண்டாக்கப்பட்ட பொய்யான ஹிந்து மதத்தில் மேலே கூறிய வரலாற்றுக்கு முரணான செய்திகளை ஆபாசமான முறையில் அறிவுக்குப் பொருந்தாத வகையில் கூறுகிறார்கள் 'பிறம்ம தேவன் மடியிலிருந்து நாரதர் தோன்றினார். கட்டை விரலிலிருந்து பிரஜாபதி தோன்றினார். பிராணனிலிருந்து வசிஷ்டர் தோன்றினார் தொடர்ந்து பிரம்மனின சங்கற்பத்தால் அத்ரி, ப்ருகு ஆகிய மஹரிஷிகள் தோன்றினர்'

விண்வெளியிலிருந்து பதினெண் சித்தர்களோடு வந்தவர்களில் ஒருவரையே முதல் முதல் பிறமண் என்ற பொறுப்பில் நியமித்தார்கள் பதினெண் சித்தர்கள். சித்தர் நெறிப்படி 'பெண்மையே இறைமை' 'தாயே தெய்வம்' 'பெண் வழியே அருளுலகப் பத்தி, சத்தி, சித்தி, முத்தி வாழ்வு வாழ வேண்டும்' 'பெண்ணின்பமே பேரின்பம்', 'பெண்ணே அருவ சத்திகள் அனைத்தையும் உருவமாக்கித்தர வல்லவள்' 'பெண்ணே ஞானப் பயிர் விளைவிக்கும் நல்ல நிலம்'.........என்ற தெளிவான கருத்துக்கள் இருப்பதால் இந்தப் பிறமண் இம் மண்ணுலகத்துப் பெண்களில் அருட் கல்விக்குத் தகுதியுடையவர்களையெல்லாம் தேர்ந்தெடுத்துக் கல்வி புகட்டிக் கலைமகள்கள் ஆக்கினார், அப்படி அவர் உருவாக்கிய மாணவிகளில் தலை சிறந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்துத் தான் தன் மனைவியாக ஆக்கிக் கொண்டார்— இப்படிக் குருபாரம்பரியம் குருவாசகம், குருவாக்கியம் முதலிய நூல்கள் பதினெண் சித்தர்கள் உண்டாக்கிய மெய்யான இந்து மதத்தில் வாழ்ந்த பிரமண் என்ற சித்தரின் காதல் திருமணம் பற்றிய செய்தியைக் குறிக்கின்றன. ஆனால், பிறமண்ணினரான பிராமணர் எனப்படும்.


வடஆரியர்கள் தங்களுடைய சமசுக்கிருத மொழியில் தாங்கள் உருவாக்கிய பொய்யான ஹிந்து மதத்தில் 'இப்படி பிரம்மன் தொடர்ந்து சிருஷ்டித்துக் கொண்டிருந்த போது அவன் சங்கல்பத்தால் கல்விக்கும், ஞானத்துக்கும், அறிவுக்கும், உறைவிடமான சரஸ்வதி தோன்றினாள் அவளே பிரம்மனின் தர்மபத்தினியானாள் தான்படைத்த பெண்ணைத் தனக்குப் பத்தினியாக்குமுன் பிரம்மன் தன் தேகத்தைப் புதிய சரீரமாக மாற்றிக் கொண்டான் இங்கே மறுபிறவித் தத்துவத்தை பிரம்மனே ஆரம்பித்து வைக்கிறான்,

பதினெண் சித்தர்கள் இருடிகள் மட்டும் ஓதுவதற்குரிய இருடிவேதம் இருக்குவேதம் என்ற ஒன்றை உண்டாக்கினார்கள். இதனை ஏற்கனவே குறிப்பிட்ட முனிவர்கள் இருடிகள், கருக்கள், தருக்கள்,.......எனப்படுவர்கள் காடுகளில் தங்கி ஓதி அருட்பயன்களை அடைவது மரபு– [இருடி என்பது 48 வகைப்படும்] ஆனால் பிற மண்ணினரான பிருமணர்கள் பதினெண் சித்தர்கள் உருவாக்கிய மெய்யான இந்து மதத்தை கெடுக்கவும் அதன் அருட் பயன்களைத் தடுக்கவும், திட்டமிட்டு இந்த இருடிகளுக்குரிய இருக்கு வேதத்தை தங்களின் சமசுக்கிருதத்தில் ரிக் வேதம் என்ற பெயரில் ஒரு கற்பனாவாத பயனற்ற குப்பை வாசகங்களை எழுதிவைத்துக் கொண்டு இந்துக்களைத் திசைதிருப்பி அருளுலகில் நலிவும், மெலிவும், தாழ்ச்சியும், வீழ்ச்சியும், அடையச் செய்துவிட்டனர். இதே போலத்தான் பதினெண் சித்தர்கள் அசுர சித்திகளைப் பெறக் கூடிய வேதமாக உண்டாக்கிய அசுர வேதத்தை பிற மண்ணினரான பிருமணர்கள் யசூர் வேதம் என்று தங்களுடைய மொழியில் உருவாக்கிய போலிவேதத்தால் செயலிழக்கச் செய்தார்கள்; பதினெண் சித்தர்கள் இரவில் மட்டும் அதாவது சாமத்தில் மட்டும் [சாமம்=யாமம்] கூறக் கூடிய 'சாம வேதம்' என்று வழங்கியதைப் பிற மண்ணினரான பிருமணர்கள் போலியாக உண்டாக்கிய ''ஸாமவேதம்'' என்பதன் மூலம் செயலிழக்கச் செய்தார்கள்; பதினெண் சித்தர்கள் தாங்கள் அருளாட்சி செய்யும் அண்ட பேரண்டகள் இயங்கும் வானவெளியில் செயல்படுவதற்குரிய வேதமாகப் படைத்த 'அதர்வான வேதத்தை' [வானத்தையே எல்லையாகக் கொண்டது இஃது, அதர்=எல்லை] பிற மண்ணினரான பிருமணர்கள் தங்களின் சமசுக்கிருத மொழியில் உண்டாக்கிய போலியான 'அதர்வண வேதம்' என்பதன் மூலம் செயலிழக்கச் செய்தார்கள்.

இப்படி மெய்யான இந்து மதத்தை பிற மண்ணினரான பிருமணர்கள் தங்களின் சமசத்கிருத மொழியின் மூலம் சிதைத்துச் சீரழித்துச் செயலிழக்கச் செய்து உருவாக்கிய பயனற்ற தேவையற்ற, மாயமான, ஆபாசமான அநாகரீகமான, மோசமான மோசடியான மதம் தான் பொய்யான இந்து மதம் எனும் ஹிந்து மதம். இப்படி இந்த இரண்டு மதங்களின் தோற்ற மாற்ற, ஏற்ற மாறு பாடு, வேறுபாடு, முரண்பாடு திரிபு........முதலியவைகளையெல்லாம், வரலாற்றுப் பூர்வமாகவும் தத்துவ ரீதியாகவும், இலக்கியப் பின்னனியோடும், அறிவிக்கப்பட்டு மக்கள் அறிந்து கொண்டால் தான் இந்துமறுமலர்ச்சிப்பணி அணி பெறும்; வெற்றி பெறும்; பயன்பெறும்; நன்மை நல்கும்.

**இவற்றை எண்ணித் தான் வட ஆரிய மாயைகளை சமசுக்கிருத இலக்கியத் திருட்டுக்களை, குழப்பங்களை, கலகங்களை, வேதமத புரட்டுக்களை, பொய்களை, கற்பனைகளை, கனவுகளை, ஆபாசங்களை மோசநாசங்களை, மோசடிகளை.........மிக மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும், முறையாகவும், நிறையாகவும், பேச்சாலும் எழுத்தாலும், செயலாலும், விளக்கும் பணி துவங்கியிருக்கிறது.**

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)



# இந்தியாவில் மார்க்சீயம் - 5

—சித்தர்

இறுதியாக இனியும் கோலோன் நகரில் இருக்க இயலாது என்ற நிலையில் 1848- ஆம் ஆண்டு மே மாதம் பத்தொன்பதாம் தேதி பிரசியாவில் ''புதிய ரைன் லாந்து கெசட்'' சிவப்பு மையால் அச்சிடப்பட்டு இறுதியாக வழங்கப்பட்டது. அவர்களது கடைசி வேண்டுகோளாக.........'எங்கும் எப்பொழுதும் தொழிலாளி வர்க்கத்தின் விடிவுக்காக! நல்வாழ்வுக்காக!.........முயற்சி செய்வோம் என்று இருந்தது'- பின் அங்கிருந்து மார்க்சும் எங்கல்சும் மே 20-21 இல் தென்மேற்கு செர்மனிக்கு சென்றனர். பின்னர் சூன் 2-இல் புரட்சிகரமான சம்பவங்களின் மையமான பாரிசுக்குச் சென்றார். எங்கல்சோ சூன் 13 முதல் சூலை 12 வரை பாடன், ஃபால்சு, என்ற இடங்களில் நேரடியாகப் புரட்சியில் ஈடுபட்டார். இவற்-றின் விளைவாக பிரான்சின் கடும் கோபத்துக்குள்ளாகி பிரான்சை விட்டு இருவரும் வெளியேற்றப்பட்டு இலண்டன் மாநகர் செல்ல நேரிட்டது.

இலண்டன் மாநகருக்கு 1849-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 24-ஆம் தேதி எந்த விதமான அடிப்படை வசதியுமின்றி வந்து சேர்ந்தனர். வந்தும் தளராமல் 1850 மார்ச்சில் இருவரும் 'கம்யூனிசிட் லீகின்' மத்தியக் கமிட்டியின் வேண்டுகோள்' என்ற அறிக்கையைத் தயார் செய்தனர் இதில்' தொழிலாளர்களுக்கெனத் தனி இயக்கம் — தொழிலாளர் போராட்ட முறை' முதலியவை நன்கு விளக்கியுரைக்கப்பட்டன. ஆனால் மார்க்சும் எங்கெல்சும் தீவிரவாதப் போக்கு கொண்டவர்கள் மட்டுமல்ல; விஞ்ஞானப் போக்கில் ஆராயும் மேதைகளாக இருந்ததினால் 'லீசில்' இருந்த மிதவாதிகளுடன் தகராறுகள் தோன்றின. இதன் காரணமாக இவர்கள் அதன் தீவிரப் பணியிலிருந்து விலகி தனது ஒப்பற்ற 'மூலதனம்' எனும் நூலுக்கென குறிப்புக்களையும், செய்திகளையும் திரட்ட முற்பட்டார்கள்.

மார்க்சின் குடும்பம் மென்மேலும் வறுமையிலும், பிணியிலும் சிக்கித் துன்புறுவதைக் கண்ட 'எங்கெல்சு' மீண்டும் தனக்குப் பிடிக்காத வேலையை மேற்கொள்ள 'மான் செசுட்டர்' நகருக்குச் சென்றார். அவரின் அயரா உழைப்பால் வாரம் தோறும் ஒரு சிறிய தொகையை மார்க்சின் குடும்பத்திற்கு அனுப்பி வைத்தார் ஆனால் அப்பணத்தின் பெரும் பகுதியோ மார்க்சுக்கு விருப்பமான சுருட்டிற்-கும, குறிப்புக்கள் எழுத உதவும் 'தாளுக்கும் மைக்கும்' செலவிடுவதிலே பயன்பட்டது. மிகுதியில் சென்னி மார்க்சு தனது குடும்பத்தை நடத்தியது எப்படிப்பட்ட கனலாற்றைக் கடப்பதற்கு ஒப்பாகும் ஒப்பாகும் என்பது சொல்லவும் வேண்டுமோ? அனைத்து ஆரவாரப் போராட்டத்தினின்று விலகி நாள் தோறும் இலண்டனில் புகழ் பெற்ற பொருட் காட்சி நூலகத்திற்குச் சென்று வருவதையே தனது முக்கியத் தொழிலாக மேற் கண்டார் மார்க்சு.

மார்க்சும் எங்கெல்சும் தொலைவில் இருந்தாலும் செயலால், உணர்வால் அருகிலிருந்தனர். இருவரும் சார்டிசுட்டு இயக்க வெளியீடான 'மக்களுக்குக் குறிப்புக்கள்', மக்களின் செய்தித்தாள்' இரண்டுக்கும் கட்டுரைகள் எழுதித் தங்களை அறிமுகமாக்கிக் கொண்டனர். மேலும் அரசியல் பொருளாதாரம் தத்துவம் போன்றவற்றில் அளப்பரிய ஆர்வத்தையும், ஆராய்ச்சித் திறனையும் வளர்த்துக் கொண்டு வந்த மார்க்சு அவ்வப்பொழுது எழுதி வந்த கட்டுரைகள் அவரின் ஆராய்ச்சித திறனை, புலமை யை, அறிவாற்றலை.........உலகம் உணரும்படி செய்தது இத்தனைக்கும் அவரை-வறுமையும் பிணியும் துரத்திக் கொண்டிருக்-கும் பொழுது 'நியுயார்க் தின அழைப்பு'

[தொடரும்]

இதனைப்புரிந்தும் புரியவைத்தும், விருப்பத்தோடு எல்லா விதமான ஆதரவுகளையும், வழங்கும் நிலை வளர்ந்தால் தான் இந்து மதத்துக்கு வருங்காலமுண்டு. இல்லையேல் இதுமாற்று மதங்களாலும், வேற்று மதங்களாலும், நாத்திகர்களாலும், பகுத்தறிவாளர்களாலும் இந்து மத துரோகிகளாலும், விரோதிகளாலும், இந்து மதத்துக்கு வருங்காலமே இல்லாமல் இருண்ட நிலை ஏற்பட்டுவிடக் கூடும் என்பதே. இந்து மறுமலர்ச்சி இயக்கக் கருத்துக்களை அதாவது, சித்தர் நெறிக் கருத்துக்களைச் சாதாரணமான மறுப்பு, வெறுப்பு, எதிர்ப்புக் கருத்தாக நினைக்கவேண்டாம். அதாவது, சித்தர் நெறிச் செயல் வீரர்களும், வீராங்கனைகளும், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் மூலம் மெய்யான இந்து மதத்தைக் காக்கும் உயிர்ப்போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்கள்.

(தொடரும்)

## உலககுரு சகதகுரு

உலககுரு, சகதகுரு என்று பதினெண் சித்தர்களால் குறிக்கப்படும் சொற்கள் சமசுக்கிருதத்தில் 'லோககுரு', 'ஜகத்குரு' என்று இன்றைய காஞ்சிமடத்து சங்கராச்சாரியார்களால் குறிக்கப்படுகின்றன.

உலகம் = இம்மண்ணுலகைக் குறிக்கிறது உலக + குரு —> லோக குரு = இம் மண்ணுலகப் பகிர்மைகளோடு இரண்டறக் கலந்து வாழ்ந்து அனுபவிக்க வழி காட்டியாக இருப்பவர் —> மண் பெண் பொன் ... அனைத்தையும் ஏற்று அனுபவிப்பவரே. சகடம் = இயங்கிக் கொண்டே இருக்கும் இம்மண்ணுலகத்தையும் மனித வாழ்க்கையும் குறிக்கும் —> இம்மனித வாழ்வைத் தாங்கிச் செல்லும் வண்டிபோன்று இருப்பவனைக் குறிக்கும் —> சகட + குரு —> சகத்குரு இப்பொருளிலேயே பதினெண் சித்தர்கள் ஆதி சிவாச்சாரியார், ஆதி பிரமாச்சாரியார், ஆதி சங்கராச்சாரியார், ஆதி ஈசுவராச்சாரியார் எனும் நான்கு ஆச்சாரியார்களுக்கு மட்டுமே உலககுரு, சகத்குரு என்ற பட்டங்களை வழங்கியுள்ளனர். இதைப் புரிந்து கொள்ளாமல் பிறமண்ணினர்கள் தங்களின் கற்பனையான துறவுக்கோலக் காஞ்சி சங்கராச்சாரியார் பீடத்தைத் தோற்றுவித்துக் கொண்ட ஆச்சாரியார்களுக்கும் உலககுரு —> 'லோககுரு', சகத்குரு —> ஜகத்குரு இரண்டு சமசுக்கிருத மொழி ஒலிக்கேற்ற 'லோககுரு,' 'ஜகத்குரு' சொற்களை உருவாக்கிக் கொண்டார்கள்.

குறிப்பு

I. உலககுரு, சகத்குரு எனப்படுபவர்கள் பெயராளவிலாவது திருமணம் செய்திருக்க வேண்டும்;

II. கூடுவிட்டுக் கூடு பாய்ந்தாவது; அருவுருவ நிலையிலாவது பெண்ணின்பம் துய்த்திருக்க வேண்டும்

III. எந்திரக, தாந்திரீக, மாந்திரீகப் பூசைகளைச் செய்ய வேண்டும்.

IV. போக, யோக, வேக, ஞான துட்பங்களை உணர்ந்திருக்க வேண்டும்.

V. காமசாத்திர, சாத்திர, சாத்தர, சூத்திர, சூத்திர, சூத்திரங்களில் தேர்ந்திருக்க வேண்டும்

ஆனால், துறவியாக, பிரம்மாச்சாரியாக வாழும் இன்றைய சங்கராச்சாரியார்கள் தங்களை லோககுரு (உலககுரு) ஜகத்குரு (சகத்குரு) என்று குறிப்பது தவறே! கேலிக்கூத்தே!

# அன்புள்ள சேவகனுக்கு..........!

அன்புள்ள சேவக!

இன்றைய நாட்டு நிகழ்ச்சிகளை உற்று நோக்கிடு. இரண்டுக்கும் மேற்பட்ட பட்டங்களைப் பெற்ற ஆசிரியப் பெருமக்கள் நூறாயிரம் பேர்களுக்கு மேல் வெஞ்சிறையில் ஒரு மாத காலத்துக்கும் மேலாக வாடி வதங்கித் திரும்பியிருக்கிறார்கள். இவர்களில் பதினாறுபேர்கள் பலியாகியிருக்கிறார்கள். எண்ணற்றோர் உடல்நலத்தையும், உள நலத்தையும் இழந்து திரும்பியிருக்கிறார்கள். ஆனால் 'போராட்டத்தால் எதையும் பெறமுடியும்' — என்ற கருத்தை முழுமையாகப் பெற்றே திரும்பியிருக்கிறார்கள். இவர்கள், தனிமனிதர், குடும்பம், சமுதாயம், அரசியல், சீர்திருத்தம், போராட்டம், புரட்சி...... என்ற சொற்களைப் புரியவும், புரியவைக்கவும் முற்படுவார்கள்

உடல் வலிமை பற்றிய கவலையின்றி இரவு பகலாகப் படித்து: அறிவு வளத்தை மட்டும் பெருக்கிக் கொண்ட ஆசிரியர் சமூகத்துக்கு வெஞ்சிறைக் கொடுமை ஒரு பெரிய அதிர்ச்சி, பயிற்சித்துவக்கம். அதாவது, முறையாகவும் நிறையாகவும் கற்றுத் தேர்ந்த ஆசிரியர் சமூகத்துக்கும்: அரைகுறையாகக் கற்றுத்தேர்ந்த அனைத்துத் தலைமைச் சத்திகளுக்கும் இடையே ஏற்பட்ட நேரடிப் போரே இது. இதனால், 'படித்தவர்களுக்கும் ஆளுபவர்களுக்கும் இடையே போர் விளைந்தால் தான் நியாயம் பிறக்கும்' — என்ற செயல் சித்தாந்தம், நாற்றங்காலில் விதைக்கப்பட்டுப் பயிராக்கப்படும் விவசாயம் துவங்கியிருக்கிறது.

எப்படியோ....? ஆசிரியர் சமுதாயம் போராட்ட உணர்வையும், போராட்டப் பண்பையும். போராட்ட நம்பிக்கையையும், போராடும் பழக்கத்தையும்......கற்றுக் கொள்ள வேண்டிய அல்லது வளர்த்துக் கொள்ள வேண்டிய நிலைமை வந்து விட்டது. இனிமேல் தான் ஆசிரியர் சமுதாயம் கட்டுவதையும் நாட்டுவதையும் இணைக்கும் மாபெரும் பணியில் ஈடுபடக்கூடும். அதாவது, இனிமேல், வயிற்றுப் பிழைப்புக்குரிய கல்வியையே வழக்கமாக வழங்கும் நிலைமாறிச் சமுதாய அநீதிகளை எல்லாம் அகற்றும் மெய்ஞ்ஞானக் கல்வியின் வித்துக்கள் விதைக்கப்படும் நிலையே வளர்ந்திடும். அதனால், ஆசிரியர் மாணவர் உறவும்; ஆசிரியரின பாட்டாளி வர்க்க உணர்வும் பொலிவுமிக்க வலிமையோடு செழித்தோங்கி வளரும். எனவே பொதுவாக இனிமேலாவது, 'உழைக்கும் வர்க்கம்' என்ற உணர்வோடு ஆசிரியர்கள் கூட்டுறவாலும், விழிச்சியும்; எழுச்சியும் செழிச்சியும் பெற்றிடுவர்.

இதே போலத்தான், தமிழர்களுக்கும் ஓர் இக்கட்டான போராட்ட நிலைமை உருவாக வேண்டும். அப்போது தான். இந்து மதத் தத்துவத்திலும் வரலாற்றிலும உண்மையான பற்றும், முறையான பயிற்சியும் நிறைவான தேர்ச்சியும் விளைந்திடும அதாவது இந்து மதத்தை ஏற்றுக் கொண்ட தன்மானத் தமிழனுக்கும்; அரைகுறை இந்து மத அறிவும பற்றும், பயிற்சியுமுள்ள. அப்பாவித் தமிழர்களின போலித் தலைவர்களுக்கும் இடையே நேரடியான போராட்டம் துவங்கிடல் வேண்டும். அப்பொழுது தான். தமிழர்கள், தங்களுடைய மொழியுரிமை, இன உரிமை, பண்பாட்டுப் பெருமை நாகரிக அருமை, சமுதாயக் கட்டுக்கோப்பு சுயமரியாதை, தன்னம்பிக்கை..........முதலிய அனைத்துமே இந்துமதத்தின் வளர்ச்சியிலும் வலிமைப் பொலிவிலும் தான் இருக்கின்றது என்ற பேருண்மையைக் கற்றுக் கொள்ள

அன்பு!

[illegible]

# கேள்வியும் நானே.......! பதிலும் நானே........!

## திரு ஞான சம்பந்தர் பிருமணரா? ஆரியரா? பார்ப்பனரா?

வடமொழிக்கும், பிருமணருக்கும், ஆரியமதத்துக்கும், பார்ப்பனச் சனாதன தருமத்துக்கும் ஆதரவாளராக விளங்கிய பல்லவர்களையே நிலைகுலையச் செய்த திருஞானசம்பந்தர் சீர்காழித் தமிழ் அந்தணர், குருக்கள், சிவாச்சாரியார் சிவபாத இருதயர் எனும் கருணீக சைவவேளாளர் குடும்பத்தில் தோன்றியவரேயாவார் இவருடைய பெயர் 'ஆளுடைப்பிள்ளை' 'திருஞான சம்பந்தம் பிள்ளை' 'சீர்காழிப்பிள்ளை'...........என்று சித்தர் நெறிப்படி தமிழர்க்கே உரிய சிறப்புப்பட்டப் பெயரால் அழைக்கப்படுகிறார் அதாவது, திருநாவுக்கரசு வேளாளர், திருநாவுக்கரசுச் சைவன், சுந்தரம்பிள்ளை, சுந்தர வேளாளர், சுந்தரச்சைவன், திருஞான சம்பந்தாச் சாரியார், திருநாவுக்கரசாச்சாரியார், சுந்தராச்சாரியார் என்று தேவாரம்பாடிய மூவரும் குறிக்கப்படும் மரபே இவர்களைத் தமிழர் என்று விளக்குகின்றன

பெரிய கோயில் தில்லையம்பதியருகேயுள்ள திருநாரையூர்ப் பிள்ளையார் கோயில் ஆண்டி மகன், பண்டாரம் மகன், பூசாறி மகன், சிவாச்சாரியார் மகன், தமிழ் அந்தணன் மகன், அருட்பாகாத்த நம்பி...........என்று பாராட்டப்படும் சைவ வேளாளன் நம்பியாண்டான் நம்பி தனது அருள் சமத்துவப் பொதுவுடமை நிலைகளையெல்லாம் கடந்து தனது குல முதல்வனான சீர்காழிப் பிள்ளை சிவபாத இருதயரின் மகன் திருஞான சம்பந்தம் பிள்ளையை 'ஆளுடைய பிள்ளை'' என்று தமிழ்ச்சாதிப் பெயரால் பராட்டுகிறான்.

இந்த நம்பியாண்டான் நம்பி சைவத்திருமுறைகளைத் தொகுத்ததால் தான் பிருமணர்களின் எதிர்ப்பையும் மறுப்பையும் வென்று 1 திருமூலர், 2. மாணிக்கவாசகர், 3. திருமாளிகைத்தேவர் 4. சேந்தனார் 5 கருவூர்த் தேவர், 6 பூந்துருத்தி நம்பி, 7 காடநம்பி, 8. கண்டராதித்தர், 9. திருவாலியமுதனார், 10 புருடோத்தம நம்பி, 11. சேதிராயர், 12 திருவாலவாயுடையார், 13 காரைக்காலம்மையார் 14 ஐயடிகள் காடவர் கோன், 15 சேரமான் பெருமாள் நாயனார், 16. நக்கீர தேவர், 17. கல்லாடதேவர் 18 கபிலதேவர், 19 பரணதேவர், 20 இளம்பெருமானடிகள், 21 அதிராவடிகள், 22 திருவெண் காட்டடிகள்............முதலிய தமிழர்களின் போதனைகளும் சாதனைகளும்.........நிலையான வாழ்வைப் பெற்றுத் திருமுறைப் பட்டியலில் இடம் பெற்றனர்

நம்பியாண்டான் நம்பிக்குத் தனது பூசாறி குலத்துக்கு, ஆச்சாரிய குலத்துக்கு, தமிழ் அந்தண குலத்துக்கு, சைவ வேளாளர் குலத்துக்குப் பெருமை தரும் மூலவராக, முதல்வராக, இளைஞான திருஞானம்பந்தம் பிள்ளை திகழ்வது குறித்துப் பூரிப்பும், பெருமிதமும் அளவற்று ஏற்பட்டன. அதனாலேயே, அவர்பாடிய பத்து நூல்களில் ஆறுநூல்கள் திருஞான சம்பந்தம் பிள்ளையைப் பற்றியனவாகவே அமைந்தன.

1 ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி
2. ஆளுடைய பிள்ளையார் திருச்சபை விருத்தம்
3. ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவை
4. ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை
5. ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்
6 ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை

எனும் இந்த ஆறுநூல்கள் திருஞானசம்பந்தர் **'பிள்ளை'** எனப்படும் தமிழ் அந்தணரே, சைவ வேளாள மரபினரே, பூசாறியே, ஆச்சாரியே என்ற பேருண்மை விளக்குகின்றன

7. திருநாவுக்கரசர் ஏகாதசமாலை
8. திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை
9. கோயில் திருப்பண்ணியர் விருத்தம்
10 திருத்தொண்டர் திருவந்தாதி— ஆக மீதி நான்கு நூல்கள்

இம் மாபெரும் பேருண்மைகளை விளக்கும் வண்ணமே காலடி ஆதி சங்கராச்சாரியார் தமது **'சௌந்தர்ய லகரியில்'** 75-வது சூத்திரத்தில் திருஞான சம்பந்தரையும் தன்னையும் திராவிடசிசு என்று குறிக்கிறார்—இவை போதும் திருஞான சம்பந்தர் ஒரு தமிழரே (பிருமணரல்ல) என்பதை விளக்கிட

# வணக்கவுரை

**பிறமாச்சாரியார் சி. கவிக்குமார்**

இதுவரை, இந்தியா உலகுக்கு தந்துள்ள நாகரீகங்கள், பண்பாடுகள், கலைகள், விஞ்ஞானங்கள், தத்துவங்கள், சிந்தனைகள், படிப்பினைகள், வரலாறுகள்.... எண்ணற்றவை. இந்தியாவின் பழமையும், சிறப்பும் என்றென்றும் உலகின் கண்களை கவர மறுத்ததே இல்லை. ஏன், உலகின் எந்த காலக்கட்ட வரலாற்றை எழுத முனைந்தாலும்; இந்தியாவை நினைக்காமல் எழுதவே முடியாது என்றளவிற்கு இந்தியா அனைத்து வகையிலும் ஓங்கியிருந்தது. இதற்கு காரணம் இந்தியா இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னாலே தோன்றி அனைத்துவகையிலும் உயர்ந்திருந்தது தான் காரணம்.

இந்த உயர்ச்சி இந்தியாவிற்கு மட்டும் ஏனைய நாடுகளுக்கு முன்பே கிடைத்தது என்றால் அதற்கு காரணம் **இந்துமதம்** தான் என்பதை எவரும் மறுக்க இயலாது. இந்தியாவின் கலை, அறிவியல், தத்துவம், பண்பாடு...... யாவும் இன்றளவும் எவராலும் மறுக்க இயலாத ஒன்று; பகுத்தறிவு, நாத்திகம், முற்போக்கு...... யாவும் 16 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னால் வந்தவையே! ஆனால், இந்தியா 16 நூற்றாண்டுகளுக்கும் முன்னாலேயே உலக வரலாற்றில் காலடி எடுத்து வைத்துள்ளது.

சமுதாய நடைமுறைகள் சுரண்டலாகவும், வர்க்கப் போக்குள்ளதாகவும்; ஏற்றத் தாழ்வு முறைகள் உள்ளதாகவும் இருந்திருக்கலாம். ஆனால் தத்துவங்களோ கொள்கைகளோ தவறானதாகவோ, முறையற்றதாகவோ இருந்திருக்கவில்லை என்பது உண்மையே! ஆண்டவன் (அரசை) தவறு செய்துள்ளான்! ஆனால் **ஆண்டவன்** தவறு செய்ததாக எவரும் கூறவில்லை.

இன்று **'மாவோ'**வின் சிந்தனைகள் சீனமண்ணிலே மடிந்து கொண்டிருப்பது போல; பதினெண் சித்தர்களின் பொதுவுடமைக் கருத்துக்களடங்கிய உண்மையான **இந்துமதக்** கருத்துக்கள் வட ஆரியர்களின் ஆட்சியால் செத்து மடிந்து கொண்டிருக்கின்றன. ஆனால் வரலாறு தரும் படிப்பினைகளை வருங்கால இளைஞர்கள் படிக்கத் தவற மாட்டார்கள் என்பது காலங்காட்டும் உண்மையே!

—சி. கவிக்குமார்

---

**அடுத்த இதழில்**

'ஒன்பது கோள்கள் பற்றிய உண்மைகள்'...... என்ற தலைப்பில் 'உண்மையான இந்துமதக் கருத்துக்கள்' அடுத்த இதழில் வருகின்றன. 'அருணகிரிநாதரின் உண்மையான வரலாறும் இடம் பெறுகின்றன.

தொடர்பு: தலைமைப் பொறுப்பகம், சி. கவிக்குமார் B. Sc,
தலைமைப் பொறுப்பாளர், 56 N G O காலனி, பொன்னேரி-601 204.

---

KVS பிரிண்டர்ஸ் பொன்னேரி.